**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

O.S.No.272/2024 **நாள்– 06.11.2025.**

வாதிகளின் பொது அதிகார முகவரான திரு. ராஜாராம் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு வா.சா. 1 ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படிகிரேடு 1 பெஞ்ச் கிளார்க் K.தமிழ்செல்வி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராம் | தாலுகா | |
| த–பெ | சீனிவாசன் | தொழில் | |
| கிராமம் | வ.புதுப்பட்டி | வயது | 77 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

1) பிராது தபசில் சொத்துக்களுக்கு உண்டான நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு ஜெராக்ஸ் நகல் தாக்கல்.

2) 21.03.1989ம் தேதியிட்ட பிராது தபசில் சொத்திற்கு வடக்கு பக்கமுள்ள சொத்தினை வத்தல் மூர்த்தி நாயுடு வாரிசுகள் பாகம் செய்துகொண்ட பதிவு செய்யப்பட்ட பதிவு பத்திரத்தின்ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.1**.

3) 05.05.2017ம் தேதியிட்ட குப்புசாமி நாயுடு மகன் சீனிவாசன் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.2**.

4) 28.06.2017ம் தேதியிட்ட சீனிவாசன் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.3**.

5) 02.03.1998ம் தேதியிட்ட பிராது தபசில் 1வது அயிட்ட சொத்தினை சீனிவாசன் நாயுடு வாரிசுகள் 1ம் வாதியின் கணவருக்கு கிரையம் கொடுத்துள்ள கிரைய பத்திரம் (ஆவணம் எண்.210/1998) ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.4**.

6) 20.04.1998ம் தேதியிட்ட பிராது 2வது அயிட்ட சொத்தினை பொறுத்து சீனிவாச நாயுடுவின் குமாரர்கள் குமரேசன் மற்றும் சுரேஷ்பாபு இருவரும் சேர்ந்து 1ம் வாதியின் கணவருக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய பத்திரம் (ஆவணம் எண்.415/1998) ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.5**.

7) 22.12.2011மற்றும் 15.06.2018தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்களில் கட்டிடம் கட்டுவதற்காக 1ம் வாதியின் கணவர் வ.புதுப்பட்டி பேரூராட்சியில் பெற்றுள்ள கட்டிட வரைபடம் ( 3வரிசைகள்) அசல் **வா.சா.ஆ.6**.

8) 05.02.2013ம் தேதியிட்ட பிராது தபசில் சொத்தில் உள்ள கதவு எண்.38/1 உள்ள கட்டிடத்தினை பொறுத்து 1ம் வாதியின் கணவர் இந்தியன் ஓவர்சிஸ் வங்கியும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்த் பத்திரம் ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.7**.

9) பிராது தபசில் சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு 1ம் வாதியின் கணவர் செலுத்தியுள்ள சொத்து வரி ரசீதுகள் 15 எண்ணம் அசல் **வா.சா.ஆ.**8

10) 2019–2020 ம் 1ம் வாதியின் கணவர் வ.புதுப்பட்டி பேரூராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தியதற்கான ரசீது 3 எண்ணம் **வா.சா.ஆ.**9

11) 03.03.2024ம் தேதியிட்ட 1ம் வாதியின் கணவரின் இறப்பு சான்று ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.**10

12) 1ம் வாதியின் கணவரின் வாரிசு சான்று ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.**11

13) பிராது தபசில் சொத்தில் உள்ள கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பிற்கு 1ம் வாதியின் கணவர் மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீது 5 எண்ணம் **வா.சா.ஆ.**12

14) பிராது தபசில் உள்ள கட்டிடங்களுக்கு 1ம் வாதியின் பெயரில் செலுத்தியுள்ள சொத்துவரி ரசீது 4 வரிசை **வா.சா.ஆ.**13

15) பிராது தபசில் சொத்தில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு 1ம் வாதி செலுத்தியுள்ள குடிநீர் கட்டண ரசீது 2 எண்ணம் **வா.சா.ஆ.**14

16) பிராது தபசில் சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு 1ம் வாதி செலுத்தியுள்ள மின்ட கட்டண ரசீது 3 எண்ணம் **வா.சா.ஆ.**15.

17) 01.07.2019ம் தேதியிட்ட சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் வத்திராயிருப்பு வட்டாடசியருக்கு அனுப்பிய குறிப்பாணை சார்பு நகல் **வா.சா.ஆ.**16

18) 11.07.2023ம் தேதியிட்ட 1ம் வாதியின் கணவர் பட்டா வழங்கோரி கொடுத்த மனுவினை தள்ளுபடி செய்து 3ம் பிரதிவாதி பிறப்பித்துள்ள உத்தரவு சார்பு நகல் **வா.சா.ஆ.**17

19) 13.07.2024ம் தேதியிட்ட வாதிகள் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ள சிறப்பு அதிகார பத்திரம் அசல் **வா.சா.ஆ.18.**

**( கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 06th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.